உ

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான
ஓர் மாதாந்த தமிழ்பத்திரிகை.

புத் 2. { 1911-௵ செப்டம்பர்௴ } நெ. 9.

## இரத்தம் அல்லது உதிரம். (BLOOD—பிளட்.)

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எண்ணரிய சராசரங்களும் ஓர் வகை திரவத்தைக்கொண்டே இந்நிலவுலகில் உயிர்வாழ்கின்றன. அவற்றுள் புற்பூண்டு மரம் முதலிய தாவரங்கள் சிலதில் ஓர்வகை திரவமும் மற்றும் சிலதில் பால்போன்ற வெண்ணிறமான திரவமும் இருந்து அவற்றைப்போஷித்து வருகின்றன. அது போலவே, மனித சரீரத்திலும் மற்றுமுள்ள ஜீவப்பிராணிகளிலும் ஓர்வகை சிவந்த திரவம் ஐக்கப்பட்டிருக்கிறது அத்திரவமே இரத்தமாம். இரத்தமானது சரீரத்திற்கு நூதன சம்பவமும் (Development) சரீரம் வளர்ச்சியடையவும், நமது தேகத்திலுள்ள பிரதி உறுப்புகளும் அதனதன் வேலையைக் கிரமமாய்ச் செய்வதற்கும் ஜீவன் நிலைநிற்பதற்கும் பிரதானமாம். இரத்தமானது நமது தேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கும்போது திரவரூபமாயிருக்கும். அதைத்தேகத்தினின்று வெளிப்படுத்தினால் துவைந்துவிடும். இரத்தத்தில் ஜலமும் அணுக்களுமுண்டு, இரத்த நீரில் சீரம் (Serum) என்கிற ஜலமும், பைபிரின் (Fibrin) லிம்ப் (Lymph) என்கிற இழைகளையொத்த பாதார்த்தங்களும் ஐக்கப்பட்டிருக்கிறது. இரத்தம் உறையும்போது பசையானது ரத்த அணுக்களைச் (Globules) சேர்த்து இருக்குக்கொள்ளும். அதற்கு கிளாட் (Clot) என்றுபேர். சீரமென்னும் ஜலத்தில் அல்பியூமன் (Albumen) என்னும் பதார்த்தமும், சில உப்புகளும், கொஞ்சம் கொழுப்பும் இருக்கின்றன. கிளாட் என்னும்

உறைந்த ரத்தத்தில் பைபிரின் (Fibrin) என்னும் பசையான பதார்த்தமும் ரத்தஅணுக்களும் அடங்கியிருக்கின்றன. நமது இரத்தத்தில் 2-விதமான அணுக்களுண்டு அவ்வணுக்களை அணுதரிசனி அதாவது பூதக்கண்ணாடியினால் (Microscope) பார்வையிட்டால் அவைகளில் ஒன்று சிறுத்து சிவப்பாய், பக்கங்கள் அமுந்தி விஸ்தாரமாய் இருக்கும். மற்றொன்று பெருத்து வெள்ளையாய் குறைந்திருக்கும். சிவந்த அணுக்களே ரத்தத்துக்கு நிறத்தைக்கொடுக்கின்றன. அவைகளில் அயம் உண்டு. அந்த அயம் குறைவதே பாண்டு ரோகம் அயம் குறைந்தால் ரத்தத்திலுள்ள பாமாணுச்சிற்றுயிர்களின் அளவு குறையும். பாண்டு ரோகத்தையுடைய ஒரு ஸ்திரீயின் ரத்தத்தைப் பரிக்ஷித்தபோது அதில் ரத்த அணுக்கள் 100-க்கு 46-பங்கு இருந்தபோது, அயஞ்சேர்ந்த அவுஷதங்களை அவளுக்கு கொடுத்து மறுபடியும் ரத்தத்தைப்பரிக்ஷித்தபோது ரத்தஅணுக்கள் 100-க்கு 96-பங்காக தொகையிலதிகப்பட்டு அவளுடைய் வெளுத்ததேகமும் உதடுகளும் மாறி அவள் முகத்தில் வசீகரமுண்டான தாய்த் தெரிகிறது.



இந்தப்படம் ரதத்திலுள்ள சிவந்த அணுக்களைக் காண்பிக்கிறது.



இந்தப்படம் ரத்தத்திலுள்ள வெண்மையான அணுக்களைக்காண்பிக்கிறது.

இது பற்றியே சாதாரண ஜனங்களும் இளைத்தவன் இரும்பைத்தின்பான் என்று சொல்லுகிறார்கள். ஜலத்தைப்பார்க்கிலும் ரத்தம் அதிக கனமுடையது. புருஷரைவிட ஸ்திரீகளுக்கு ரத்தம் கனத்தில் குறைந்திருக்கும். ரத்தத்திலிருக்கிற ஜலமானது சீதோஷ்ணத்தினாலும் அலைச்சலினாலும் போஜனத்தினாலும் காற்றினாலும் அதன் அளவு பேதப்படும். ரத்தத்தின் பிரயோஜனமாவது சர்வாங்கத்தையும் போஷித்து ஆதரிப்பதேயாம். தேகபோஷணைக்குறிய பதார்த்தங்களெல்லாம் ரத்தத்திலிருப்பதால் அது தேகத்தில் வியாபிக்கும்போது அந்தந்த உறுப்புகள் தங்களுக்கு வேண்டிய பொருள்களைக்கிரகித்துக்கொள்ளும். அந்தந்த உறுப்புகளுக்கு வேண்டிய பதார்த்தங்களை ரத்தம் கொண்டுபோய்க் கொடுக்கிறதென்றும் சொல்லலாம். அப்படிக்கு ரத்தமானது சர்வாங்கங்களிலும் பரவி, ஒவ்வொரு உறுப்புகளும் அதனதன் தொழிலைக்கிரமமாய்ச் செய்யும்படி செய்வதினால்தான் மூளையானது புத்தியைத்தருகின்றது. இருதயமானது ரத்தத்தைத் தேகமெங்கும் பரவச்செய்கின்றது, நுரையீரலானது கெட்ட ரத்தத்தை பரிசுத்தப்படுத்துகின்றது, இரைப்பையானது நாம் புசிக்கிற அன்னபானாதிகளை ஜீரணிக்கச்செய்கின்றது. யகிர்தகண்டமானது பித்த நீரைச்சுரப்பிக்கின்றது. சிறுகுடலானது அன்னரசத்தைக் கிரகித்து அதை ரத்தத்

தில் சேர்க்கின்றது, மூத்திரக்குண்டிக்காய்களும் சருமமும் ரத்தத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்களை மூத்திரம் வியர்வை ஆகிய இவைகளின் வழியாக வெளிப்படுத்திவிடுகின்றன, பீஜங்கள் இந்திரியத்தைச் சுரப்பிக்கின்றன, கருப்பையானது கருவை வளர்க்கின்றது. இவ்விதமாக ரத்தமானது சர்வாங்கத்தையும் அதனதன் தொழிலை அட்டியில்லாது செய்யும்படி தூண்டுகிறது. இரத்தஓட்டம் நின்றுவிட்டால் பிராணன்போய்விடும். இன்னும் இரத்தமானது தேகத்திலிருக்கிற பிரயோஜனமில்லாத பதார்த்தங்களைக் கிரகித்துக்கொண்டு இரத்த பரிசுத்தஸ்தானமாகிய **நுரையீரலுக்குக்** (Lungs) கொண்டுபோகின்றது. நாடியிலிருக்கிற இரத்தம சிவந்த நிறமானதென்றும், அதுவே பரிசுத்த இரத்தமென்றும், நாளத்திலிருக்கிற இரத்தம் கருத்திருக்குமென்றும், அதுவே அசுத்த இரத்தமென்றும் முன்னதாகவே தெரிவித்திருக்கிறோம் ஆதலால் மீண்டும் அதைப்பற்றி இவ்விடத்தில் விவரிப்பது அனுவசியமாம். நாடி அறுபட்டால் பீச்சாங்குழலிலிருந்து பீரிடுவது போல் இரத்தம் பீரிட்டோடும் நாளம் அறுபட்டால் இரத்தம் கசியும். நமது தேகத்தில் சற்றேறக்குறைய 30 பவுண்டு இரத்தமிருக்கும்.

இருதயத்தினுடைய ஒவ்வொரு அறைகளும் சுமார் 4 அவுன்ஸ் இரத்தம் கொள்ளும். சுகஸ்திதியிலிருக்கிற ஒரு புருஷனுடைய இருதயத்தில் சப்தவேணுவைக் (Stethoscope) காதில் வைத்து உற்றுக் கேட்டால் ஒருமின்னிட்டுக்குச் சராசரி 70 முதல் 80 ஆவர்த்தி அடித்துக்கொள்ளும். அதற்கு **கிரமநாடி** (Regular Pulse-ரெகுலர்பல்ஸ்) என்று பேர். இந்த அளவுக்கு அதிகமாய் அடித்துக்கொண்டால், **படபடத்தநாடி** (Frequent Pulse-ப்ரீகுவண்ட்பல்ஸ்) என்று பேர். குறைந்து அடித்துக்கொண்டால் **மந்தநாடி** (Slow Pulse-ஸ்லோபல்ஸ்) என்று பேர்; நாடியின் விசை சுருக்காயிருந்தால் அதற்கு **தீவிரநாடி** (Quick Pulse-குவிக் பல்ஸ்) என்று பேர்; இருதயத்தின் அறைகளில் இரத்தம் குறைந்திருந்தால் நாடிநடை சுஷ்கித்திருக்கும். அதற்கு **சுஷ்கநாடி** (Small Pulse-ஸ்மால்பல்ஸ்) என்று பேர்; தீக்ஷிணவியாதிகளில் தீவிரமாயும், ரத்தக்ஷீண ரோகங்களில் மந்தமாயும் இருதயத்தின் நடை நடப்பது வழக்கம். ஆனால் குழந்தைகளுக்கு நாடி அதிக தீவிரமாக இருக்கும். அதாவது ஒரு மின்னிட்டுக்கு 120 முதல் 140-ஆவர்த்தி அடித்துக்கொள்ளும். ஸ்திரீகளுக்கு இருதய நடை அதிகமாயிருக்கும். நடக்கும்போதும், நிற்கும்போதும், இருதயம் சீக்கிரமாயும்; படுத்துக்கொண்டிருக்கும்போதும் நித்திரை செய்யும்போதும்; மெதுவாய் நடக்கும். இருதயத்திற்கு கமலம் என்று ஒருபெயர் உண்டு. அதாவது




இந்தப்படம் இருதயத்தின் முன்பாகத்திலுள்ளவைகளைக் காண்பிக்கிறது.

கமலமாகிய தாமரை புஷ்பமானது சூரியனைக் கண்ட மாத்திரத்தில் விரிந்தும், சூரியனைக் காணுதபோது குவிந்தும் போவதுபோல், இருதயத்திலுள்ள மேல் அறைகள் இரண்டும் ஏககாலத்தில் குவியும், கீழறைகளும் அவ்விதமாகவே விரிந்து குவிவது பற்றியே இருதயத்தையும் இருதய கமலமென்று சொல்லப்படுகிறதுபோலும்.

இரத்த ஓட்டம் (Circulation of the blood—ஸர்குலேஷன் ஆவ்திபிளட்) இருதயத்தின் இடது பக்கமிருக்கிற சிவந்த ரத்தமானது தேகமெங்கும்பரவி, உறுப்புக்களைப்போஷிக்கும். தேகத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்கள் ரத்தத்திற்கலந்து ரத்தம் கறுத்துவிடும். இவ்விதமாய்க் கறுத்துக் கெட்டுப்போன ரத்தமானது இரண்டு பெரு நாளங்கள் (Venae cavae—வீனிகேவி) வழியாய் இருதயத்தின் வலதுசிரவத்திற்கு (Right Auricle—ரயிட் ஆரிகல்) வருகிறது. அதிலிருந்து வலது சடரத்திற்கு (Right ventricle—ரயிட் வெண்டிரிகல்) இறங்கும். பிறகு அதிலிருந்து, புப்புஸ நாடி வழியாய் சுவாஸப்பைகுட் செல்லும். சுவாசப்பையில் இந்தக்கெட்ட ரத்தமானது, காற்றுவாடைப்பட்டு தோஷம் நீங்கி சிவந்து நல்ல ரத்தமாகிவிடும். இவ்வாறு பரிசுத்தப்பட்ட ரத்தமானது பிறகு புப்புஸ நாளங்கள் (Pulmonary veins—பல்மோனெரி வெயின்ஸ்) வழியாய் இடதுசிரவத்திற்கு (Left Auricle லெப்ட் ஆரிகல்) வரும். அதிலிருந்து இடது சடரத்திலிறங்கும், பிறகு அதிலிருந்து பெருநாடி (Aorta—எயார்ட) வழியாகச்சென்று தேகமெங்கும் வியாபித்து கெட்டு மறுபடியும் இருதயத்திற்கு வருகின்றது. உதாரணமாக இரத்தத்திற்கிருப்பிடமாகிய நமது இருதயத்தை ஓர் ஏரியாகவும், அந்த ஏரியிலிருந்து கிளம்பும் பெரிய குழாயை பெருநாடி (Aorta) யாகவும், அதிலிருந்து ஒரு நகரத்தின் பலபாகங்களுக்கும் போகும் குழாய்களை ஆர்ட்டரி (Arteries) களாகவும், ஒவ்வொரு பிரிவிலுள்ள வீதிகள் ஒவ்வொன்றிற்கும் செல்லும் குழாய்களைச் சிறிய ஆர்ட்

டரிகளாகவும், பிறகு ஒரு வீதிக்குச்செல்லும் ஓர் குழாயிலிருந்து அவ்வீதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் கிளைகளாகப்பிரிந்து செல்லும் மிகச்சிறிய குழாய்களை காப்பில்லரீஸ் (Capillaries) களுக்கும் சமானமாய்ச்சொல்லலாம். இவ்விதமாக இருதயத்தின் இடது பக்கமிருந்து உற்பத்தியாகும் எயார்டாவில் இரத்தம் அதிகவேகமாயும், பெரிய ஆர்ட்டரிகளில் இரத்தம் அதிலும் குறைந்தவேகத்துடனும், சிறிய ஆர்ட்டரிகளில் இரத்தம் அதைவிடக்குறைவான வேகத்துடனும், காப்பில்லரிஸ்களில் இரத்தம் மிகமெதுவாகவும் ஓடுகிறது. இவ்விதமாக இரத்தமானது நமது சரீரத்தைச் சதா சுற்றிக்கொண்டே இருக்கிறதுடன் அவ்வவ்விடங்களிலுள்ள அழுக்குகளையும் கெட்ட பொருள்களையும் வெயின்ஸ் (Veins) என்னும் நாளங்கள் வழியாய்க்கிரகித்துக்கொண்டு, சிறந்த பண்டிதர்கள் கணித்திருக்கிறபடி அறுபதுகோடி ரந்திரங்களுடைய நுரைபீரலில் பிரவேசித்து நாம் சுவாசிக்கும் பிராணவாயுவினால் அங்கு பரிசுத்த இரத்தமாகி திரும்பவும் இருதயத்திற்குச்சென்று அங்கிருந்து நாடிகள் வழியாய் திரேகத்தின் ஒவ்வொரு உறுப்புகளுக்கும் சென்று போஷிக்கும். இவ்விதமாக இரத்தம் இருதயத்திலிருந்து வெளியில் புறப்பட்டுச் சுற்றி வரும்போது நிமிஷமொன்றுக்கு 207 கஜம் பிரயாணஞ்செய்கிறது. அதாவது, மணியொன்றுக்கு 9-மைலும் தினமொன்றுக்கு 220-மைலும், வருஷமொன்றுக்கு 80,000-மைலுமாகிறது. ஓர் மனுஷன் 84-வயதுடையவனாயிருக்கிறானென்று வைத்துக்கொள்வோம். அவனுடைய தேகத்திலுள்ள இரத்த அணு (Globule) அவன் ஜனித்த கால முதற்கொண்டு அவன் இரத்தத்திலேயே யிருந்திருந்தால் இது வரையில் அந்த அணு 70 00,000 மைல் யாத்திரை செய்திருக்கிறது. ஆ! என்ன வியக்கத்தக்க பிரயாணமிது!

நாம் உட்கொள்ளும் உணவானது இரைப்பையிற்சென்று ஜாடராக்கினியால் தகிக்கப்பட்டு சுத்தசத்து அசுத்தசத்து என இருவகையாய்ப் பிரிந்து முற்கூறிய சுத்தசத்தே இரத்தமாயும், பிற்கூறிய அசுத்தசத்தே மலமாயும் கழிகிறது. கடியாரத்திற்குக் (Watch) குறித்த காலங்களில் சாவி (Key) கொடுக்கவேண்டியது நிரம்ப அவசியமாயிருப்பது போலவே நமது தேகமாகிய யந்திரத்திற்கும், உண்டி என்னும் சாவி கொடுக்கவேண்டியிருக்கிறது, அப்படிக்கின்றேல் சாவி கொடுக்கப்படாத கெடியாரமானது எப்படி நடைபெறாதோ அது போலவே நமது தேகமும் நடைபெறாதொழியும். இதுபற்றியே, "அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்கும்" "அன்னமயம் பிராணமயம்" "ஊணற்றபோதே உடலற்றுப்போம்" "உண்டவன் உரஞ்செய்வான்" "உண்

டார்மேனி கண்டால் தெரியும்" "ஊணினால் யுத்தி பூணினால் ஜாதி" எனப்பலவாருகப் பெரியோர் கூறியிருக்கிறார்கள். ஆகையால் உணவு குறைந்தால் உதிரங்குறையும், உதிரங்குறைந்தால் தேகத்தின் சக்தி குறைந்து, ஒவ்வொரு உறுப்புகளிலும் பலக்குறைவு உண்டாகும். இரத்தக்ஷீணத்தினால், அஜீரணம், கோகை, காமாலை, பாண்டு, மகோதரம், பக்ஷவாதம் சர்மரோகம் முதலிய இவைபோன்ற இன்னும் பலவியாதிகளும் உண்டாகும், இன்னும் இரத்தக்குறைவினால் இரத்தத்தின் சாரமாகிய சுக்கிலம் குறைந்து, ஆண்குறி தளர்ந்து, ஆண்மையழிந்துபோக சக்தி குறைந்துபோம், நம்மில் அநேகர் "திரைகடலோடியுந் திரவியந் தேடு," என்னும் பொய்யாமொழியைப்பின்பற்றி பல்லாயிர மைல்களுக்கப்பாலுள்ள, அன்னிய நாட்டிற்கு கப்பல் எறி கடல் யாத்திரை செய்து தீவாந்திரங்களை அடைந்து அங்கு அடிமைத்தொழில் செய்து செப்பவொண்ணுத் சிரமப்பட்டு பணம் சம்பாதிக்கிறோம். இதற்காக உயிரை முதலாய் அத்தீவில் இழக்கிறோம். ஆனால் மதிக்கப்படாத மாணிக்கம் போன்ற இரத்தத்தை நமது சரீரமாகிய பொக்கிஷத்தில் சிறிது சிறிதாய் சேர்த்துவைக்க முயற்சியற்றவர்களாய் இருக்கிறோம். சிறிது சிறிதாய் பணம் சேர்க்க எவ்வளவு காலம் முயற்சி எடுக்கிறோம். அதுபோலவே இந்த இரத்தமாகிய இரத்தினத்தைப் பாதுகாத்து நோய் என்னும் கள்வர் கையில் சிக்கி கஷ்டமடையாதிருக்க முயற்சி எடுக்கிறோமில்லை. தாவரங்களிலுள்ள திரவப்பசை வரண்டு போனவுடன் அம்மரஞ் செடிகொடிகள் எங்ஙனம் பட்டுப்போகிறதோ அதுபோலவே இரத்த ஓட்டம் இருக்கிறவரையில் பிராணனிருக்கும் அது நின்றுவிட்டால் பிராணன் போய்விடும் உற்றுப்பார்த்தால் உதிரமே உயிர்

"That Blood is life is true and Sure
Therefore, O Man! Preserve it Pure."

---

## தேனீ. (THE BEE.)

இது விஷயமாய் மார்ச்சுமாதத்திய "விவேக போதினி" சஞ்சிகையில் மிஸ்டர் ஜி. ராஜகோபால் நாயுடு அவர்களால் அடியில் வருமாறு வரையப்பட்டிருக்கிறது:—இந்த அனேகம்பேர் பார்த்திருக்கமாட்டார்கள். ஏனெனில் இது ஸாதாரணமாய் வீட்டில் இருக்கும்படியான பூச்சிகளில் ஒன்றல்ல. இது ரிஷிகளைப்போல் காட்டில் ஸஞ்சரித்து நந்தவனங்களில் வீடுகட்டிக்கொண்டு புஷ்பங்களின் தேனையுண்டு ஜீவிக்கின்றது. இது பின்னுக்கு வேண்டுமென்று சேர்த்துவைக்கும் தேனையும், விசித்ரமான கூண்டைக் கட்டுவதற்கு வேண்டிய மெழுகையும்,

மனிதன் திருடனைப்போல் அபகரித்து உபயோகித்துக்கொள்ளுகிறான். தேனை ஒவ்வொருவரும் பார்த்திருக்கலாம். நாவுக்கு அருவருப்பான மருந்துக்கு இனிப்புத் தரவேண்டுமென்று தேனில் குழைத்துச் சாப்பிடுவதுண்டு. தேன் சர்க்கரைப்பாகை ஒத்திருக்கும். தேனின் குணம் வேறுபட்டிருக்கும். சில, கசத்திருக்கும். சில புளிப்புத்தட்டும். இவ்விதமாய் வித்தியாசப்பட்டிருப்பது அந்தந்தக் காலங்களில் கிடைக்கும் வெவ்வேறு புஷ்பங்களினாலேயே. புஷ்பங்களே தேனீக்களுக்கும் ஆதாரமானதாலும் தேன் விலை அதிகமாய் விற்கிறதினாலும் ஐரோப்பா முதலிய நாட்டார், தேன் அதிகமுள்ள புஷ்பங்களைப் பயிரிட்டுத் தமது வீடுகளில் ஆடு மாடு கோழி வளர்ப்பதுபோல் தேனீக்களை வளர்த்து லாபமடைகிறார்கள். நாம் வேலியிலாவது, மலையிலாவது, தேன் கூண்டைக் கண்டால் புகைச்சல் போட்டு ஈக்களை விரட்டி கூண்டை எடுத்துவந்து தேனைப் பிழிந்துகொள்ளுகிறோம். ஈக்கள் ஏமாந்து கூண்டை இழந்து வேறு இடங்களுக்குப் போகின்றன. ஐரோப்பியர் முதலியவர்கள் ஷெ ஈக்களின் குணகுணங்களை நன்றாய்க் கவனித்து இக்கூடுகளைச் சேதப்படுத்தாமல் எடுத்து, அதற்கென்றே வைத்திருக்கும் பெட்டிகளில் நாஸூக்காய் வைத்து பெட்டிக்குள் அமைத்திருக்கும் ஸூத்திரத்தினால் கூண்டின் ஒரு அறையாவது பின்னப்படாமல், 'தோலிருக்கச் சுளைமுழுங்கி' என்றாற்போல் தேனைமாத்திரம் பிரித்துக்கொள்ளுகிறார்கள்.

தேனீக்களில் அநேக வகைகளுண்டு. சில மலைகளிலேயே இருக்கும். சில புதர்களில் கூடுகட்டிக்கொண்டும் சில கல்பொந்துகளிலும் பாழ்கிராம குட்டிச்சுவர் மத்தியிலேயும் கூண்டுகட்டும். மலைத்தேனெடுப்பதற்கு குறவர் முதலியவர்களே தகுந்தவர்கள். செங்குத்தான பாறைகளிலுள்ள, மனிதர்கள் ஏறக்கூடாத இடங்களில் கட்டிய கூண்டை அவர்கள் சில காட்டுக்கொடிகளை அங்கங்கே விட்டு முடிச்சுப்போட்டு அப்பாறைக் குறுக்கே விட்டு அவற்றின்மூலமாய் ஏறிப் புகைச்சல்போட்டு ஈக்களைத்துரத்தித் தேனெடுப்பார்கள். இது மிக கஷ்டமானதும் பிராணபாயமுண்டாக்கத் தக்கதுமான உத்யோகம். கொடிக்கயிற்றை நம்பியே ஆள் ஏறுவதால் கொடி பிடிப்பவன் ஏறுபவனுக்கு மைத்துனனாகவே ஏற்பாடு செய்வது வழக்கம். அவர்களுக்கு மற்ற உரவினரிடத்தில் நம்பிக்கை இல்லை. தேன் கூண்டுகளில் சுக்லபக்ஷத்தில் இல்லாமல் அமாவாஸை காலங்களிலேயே தேனிருப்பதாக அனுபோகம். ஆடையை வெந்நீரில் காய்ச்சி அதை உருட்டி மஞ்சள் சாயத்தோடு கலந்து சேர்க்கப்படுகிறது. மிருகங்களில் பசுமாடு எப்படியோ

பூச்சிகளில் தேனீ ஐரோப்பா முதலிய நாட்டில் வளர்க்கப்படுகின்றது இதற்கு இருஜோடி இறகும் மூன்றுஜோடிக் கால்களும் உண்டு கால்கள் வெவ்வேறுபட்டிருக்கின்றன. இதன் தேகம் மூன்று பிரிவுகளாக இருக்கின்றது. அவையாவன, தலை, மார்பு, வயிறு.

ஸுமார் 200-வருஷங்களுக்கு முன் ஒரு இத்தாலியர் தேன் கூண்டை ஒரு கண்ணாடியில் அமைத்து ஈக்களின் குணாகுணங்களைக் கவனித்து எழுதியதுபோலவே அநேகர் கவனித்து எழுதுவதில் பின் குறித்த விஷயங்கள் வெளிப்பட்டன. இவைகளுக்குப் புத்தி விசேஷப் பட்டு இருப்பதாக அனேகர் கவனித்து எழுதி யிருக்கிறார்கள். இவைகளின் இராஜ்யபரிபாலனம் முதலியவற்றைக் கவனிக்க ஆயுஸ்காலம் வெகு கொஞ்சமென்று தெரிகிறது. ஒரு தேன் கூண்டில் சுமார் 20 ஆயிரம் பூச்சிகள் இருக்கின்றனவாம். நாம் 10 பேர் ஒன்று சேர்ந்து ஒரு வேலையை நடப்பிக்க யத்தனித்தால் யாதாமொருவன் முன்னின்று இவ்விதமாய் செய்யென்று நடப்பிக்காவிட்டால் தலைக்குத்தலை பெரியதனமாக வேலை முடியாமல் வீண் பேச்சாகவே இருக்கிறது. இப்படியிருக்க ஆயிரக்கணக்கான பூச்சிகள் ஏகோபித்து ஒரு வீட்டில் இருந்து காரியத்தை நடப்பிக்கிறதைப் பார்ப்போம். இவைகளுக்கு ஆலோசனை ஸபையும் பிரதானிகள் ஒத்துவாழ்வதற்கு அவசியமான நிர்ப்பந்தங்கள் சட்டங்கள் முதலியன உண்டு. இவை அனேக வகுப்புகளாகவே இருந்து வெவ்வேறு அலுவல் செய்கின்றன. சில கூட்டங்களாகவே இருக்கும். சில தனித்து வேலை செய்யும். வேறு சில விருந்தாளிகளாக வேலை செய்யாமல் மற்றவர்களிடத்தில் ஜீவனம் செய்யும். தேன் கூண்டு ஒரு பட்டணம் போலவும் அதனுள்ளிருக்கும் ஈக்கள் அப்பட்டணத்து ஜனங்களைப்போலவும் பாவிக்கவேண்டியது. அப்பட்டணத்தாரின் க்ஷேமத்தை நாடி காரியம் எப்படி நடப்பிக்கப்படுகின்றதோ அதுபோலவே கூண்டிலும் நடக்கிறது.

ஒரு கிராமத்தில் குடி இருப்பவர்களுக்குச் சாதாரணமாய் உண்டாகும் சிநேகிதம், சமாதானம், ஒற்றுமை முதலியவற்றுடன் பொறாமை கோபம் சண்டை சச்சரவு முதலியனவும் இன்றியமையாததுபோல் தேனீக்களுக்கும் உண்டு. இக்குணங்களால் ஒருத்தருக்கொருவர் கெடுதியுண்டாகாதபடி கவர்னர் முதலிய சிப்பந்திகள் இருப்பதுபோல் தேன் கூண்டிலுமுண்டு. தேன் கூண்டுகளில் ஒரு பூச்சி மிகப்பெருத்தும் மற்றவை சிறுத்தும் இருக்கும். பெருத்திருப்பது பெண் ஈ. அது ஒன்றே முட்டையிட்டுக் குடும்ப விருத்தி செய்யத்தக்கது. இதற்குத் தாய் ஈ அல்லது இராணி (Queen) என்று பெயர். அது வெளியில்

போவதில்லை. வேறு எந்தவேலையும் செய்வதில்லை. அதனைப்போஷிப்பிக்க அனேக சிப்பந்திகளும் ஏவலாட்களும் காத்துக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கூண்டிலும் ஆண் ஈக்கள் சில உண்டு. இவை வேலை செய்வதில்லையாகையால் மற்றவைகள் இவைகளை நிந்திக்கும். இவை இராணியுடன் இருந்து காலங்கழிக்கின்றன. இது மற்றப்பூச்சிகளை விட பெரிதாயும் தேகத்தில் மயிர் நிறைந்தும் கொடுக்கில்லாமலும் இருக்கும். இவை புதுக் கூட்ட முண்டானவுடனே ஸாதாரணமாய் வேலையாட்களால் கொல்லப்படுகின்றன. கூண்டிலிருப்பவை அனேகமாய் வேலையாட்களே. அவை தேன், மகரந்தம், பசைமுதலியவற்றை சேர்ப்பதுடன் மெழுகையும் உண்டாக்குகின்றன. அவை வீடுகட்டி குஞ்சுகளைப் பாதுகாத்துப் பகையாளிகள் உள்ளே வராதபடி காவல் செய்யும். இராணிக்கு எவ்வித ஆபத்தும் வாராமல் காப்பாற்றி எதிரிகளைக் கொன்று அவற்றின் பிரேதங்கள் கூண்டைத் தீட்டுப்படுத்துகின்றனவென்று அவைகளை வெளியே தள்ளிவிடுகின்றன. இவ்வாறு வெவ்வேறு வேலைகள் ஒவ்வொருவராலும் நடத்தப்பட்டால் யாதொரு ஒழுங்குமில்லாமல் வேலை தக்கபடி நடப்பதில்லை யென்று ஒவ்வொரு வேலைக்கும் சில ஈக்கள் நியமிக்கப்பட்டு கூண்டுகட்டும் தச்சரும் சாப்பாட்டைச் சேகரிக்கும் குடிகளும் பட்டணங்களைக் காப்பாற்றும் சிப்பாய்களும் இராணியிடம் பணிவிடை செய்யும் ஏவலாட்களும் உண்டு. இவ்வாறு வேலை செய்பவர் பேடிகள். அவற்றிற்கு முட்டையிட வாய்ப்பதில்லை. வயிற்றடியில் கொடுக்கு மறைந்திருக்கும். இராணிக்கும் பெரிய கொடுக்குண்டு. அது மற்ற இராணி ஈக்களோடு சண்டையிடும் போது மாத்திரமே தன் கொடுக்கை உபயோகப்படுத்தும். தேனீக்களுக்கு வேலை செய்யும் கருவி, வாயும் கால்களுமே. வாயானது ஒரு நீண்ட தும்பிக்கை போலிருந்தாலும் வீட்டு ஈக்களுக்கு இருப்பதுபோலல்ல. வாயில் இரண்டு ஊசிகளைப்போல் இரண்டு தாடையுண்டு. இவற்றின் முனையில் நுண்ணிய மயிர் முளைத்திருக்கும். இதுகளின் மத்தியில் ஊசிகளைவிட அதிகமாகவே நீண்டிருக்கும் நாக்குண்டு. தேன் இதனால் நக்கப்பட்டு முதலில் வயிற்றில் சேர்க்கப்படுகின்றது. இந்த வயிறு நிறைவதும் தேனீ கூண்டுக்குப் போய் தன் வயிற்றில் சேர்த்த தேனைக் கக்கும். ஊசிபோன்ற தாடை புஷ்பங்களில் வழிசெய்ய உதவுகிறது. பின்னங்கால்களைக் கவனித்தால் அகன்று ஓரங்களில் சுரசுரத்து இருக்கும். இவை கூடைபோல் உதவி மகரந்தம் கொண்டுவர உதவுகின்றன. ஓர் தேனீ, புஷ்பத்துக்குள் சென்றால் தன் தேகமுழுதும் படிந்த மகரந்தத்தைக் கால்களால் சேர்த்துப் பின்னங்கால்களிலுள்ள கூண்டுகளில் சேர்க்கின்றன. சில பூச்சிகள் மஞ்சள் தூளியைக்

காலில் கொண்டுபோவது இது தான். 'ஆயிரம்பேர் கூடி அழகான மண்டபம் கட்ட ஒருவன் கண்பட உடைந்ததாம் மண்டபம்' என்று சொல்லப்பட்ட சிறுவர்களின் விடுகதையாகிய தேன் கூண்டு எவ்வாறு கட்டப்படுகிறது என்று பார்ப்போம். பூவரசு, தேன்புஷ்பம் முதலிய மரங்களிலும் மற்றச்செடிகளிலுமிருந்து வரும் தேனீக்கள் மேற்படி செடி புஷ்பத்தின் அடியிலிருக்கும் ஒருவித பசையை வாயில் கொண்டு வந்து கூண்டிலுள்ள தச்சர்க்குக் கொடுக்க அவை சந்துபொந்துக்களை அடைத்து ஒவ்வொரு குழிக்கு ஒரேவாசல் இருக்கும்படி கட்டுகின்றன. தேன் கூண்டு ஒரேவிதமான அனேக குழிகள் விசித்ரமாய் கட்டப்பட்டிருக்கிறது. இப்பசையால் குழியின் உட்புறமெல்லாம் பூசப்படுகின்றது. பின்னும் யாதாமொரு பூச்சி இறந்துவிடுமானல் அதன் பிரேதம் அழுகி நாற்றமாகாதபடி இப்பசையை மேல் பூசிவைப்பது வழக்கம். இன்னும் கூண்டின் பக்கத்தில் நத்தை முதலியன இறந்துவிட்டால் ஓட்டைவிட்டு அதன் வழியை மாத்திரம் அடைக்கும். இவ்வாறு தன் கூண்டைச் சுத்தமாய் வைத்துக்கொண்டிருக்கும். மெழுகு என்னமாய் உண்டாகிறதென்பதை விசாரிக்கலாம். தேனீக்கள் மஞ்சள் மகரந்தத்தைக் காலில் உருட்டிப்போவது மெழுகு செய்வதெற்கென்றே அனேகர் கொண்ட எண்ணம் பிசகு. கூண்டின் அறைகளைக் கட்டுவதற்கு இவைகளின் கூண்டின் கூரையிலிருந்து ஒன்றன்பின் ஒன்ருகத் தொங்கும் தேனீக்களின் காலின் முனை கொக்கிபோலிருப்பதால் அவைகள் சங்கிலி போல் கோத்துத் தொங்க ஸாத்யமாகும். முதல் ஒரு ஈ முன்னங்கால் கொண்டு கூரையில் ஒட்டித்தொங்கும், மற்ருெரு ஈ அதின் பின்னங்காலைத் தன் முன்னங்காலால் பிடிதுத்தொங்கி இவ்வாறே நீண்ட ஸரமாகும். இம்மாதிரி 24-மணிநேரம் தொங்கும் அவைகளின் வயிற்றிலிருந்து மெழுகு உண்டாகிறது. கட்டடக்காரராகிய தச்சர் மெழுகு உண்டானவுடனே எடுத்துப்போய் கூண்டைக் கட்டிக்கொள்ளும். 1-வீசை மெழுகுண்டாக்க 2-வீசை தேன் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு உண்டாகும் மெழுகு மிக அருமையாகையால் கூடிய வரையிலும் எவ்வளவுக்குச் சிக்கனமாக உபயோகிக்கலாமோ அவ்வளவே கூண்டுகளில் உபயோகப்படுகின்றது.

இப்போது அவைகளின் புத்திசாலித்தனத்தைச் சிறிது கவனிப்போம். தேன் கூண்டு அநேக அறைகள் உருட்சியாய் யில்லாமல் ஆறு பக்கங்களுடையதாய் இருப்பதே மெழுகை வெகு கொஞ்சமாக உபயோகிக்கும் வழி. உருட்சியாய் இருந்தால் ஒன்றுக்கொன்று சந்துவிடும். அதனல் மெழுகு அதிகமாய் சேதப்படும். பின்னும் 4-பக்கங்கள் கொண்டு கட்டும் அறைகள் 6-பக்கங்கள் உள்ள அறைகளைப்போல அவ்

வளவு பலமல்லவென்பதைக் கட்டடவேலைக்காரராகிய இஞ்ஜினியர்க்குக்.
கண்டிதமாய்த் தெரிந்த விஷயம். கூண்டு கட்டுவது கூரையிலிருந்து
கீழ்நோக்கி நடக்கும் இரண்டு வீதியில் அகப்பட்ட இரண்டு வரிசை வீடு
களும் புறக்கடையில் ஒன்றுடன் ஒன்று கலப்பதுபோல் கூண்டின் இரு
பக்கமும் அறைகள் ஏற்பட்டு நடுவில் இருக்கும் இடத்தை சாத்தியமாகும்
வரையில் உபயோகிக்கும் வழியாகத் தேனீக்கள் காலதாமதப்படாமல்
வெகு சீக்கிரம் கூடுகட்டும். இந்த அறைகள் மூன்றுவித அளவாய்க்
கட்டப்படுகின்றன. சிறியவை வேலை செய்பவர்களுக்கும், மத்திய அள
வுள்ளவை ஆண் மக்களுக்கும், பெரிய அறை இராணிகளுக்குமே
வேலைக்காரருக்கோ அனேக அறைகளுண்டு. இராணி ஈயினுடைய
அறை மாளிகை என்று ஆங்கிலேய பாஷையில் சொல்லப்படும். இவை
சாதாரணமாய் 10, 20-உண்டு. இராணியம்மா இவ்வறைகளில் ஒவ்
வொருமுட்டை இட்டு கூண்டின் வாயைக்கெட்டியாக மூடும். இவ்வேலை
யில் அநேக வேலைக்காரர்கள் உதவிசெய்வார்கள். தப்பிதமாய் ஒரு அறை
யில் இரண்டுமுட்டைக்கு அதிகமிட்டிருந்தாலோ வேலையாள்கள் அதிக
மான முட்டைகளை நீக்கிக் கெடுத்துவிடுகின்றன. அறைகள் எவ்வளவு
சீக்கிரம் செய்யப்படுகின்றனவோ அவ்வளவு விரைவாகவே முட்டை
துளிர்க்காலம் முதல் மழைக்காலம் வரையில் ஒருநாளைக்கு 200-முட்டை
விழுக்காடு ஒருமாதத்திற்கு 6000-முட்டையிடும். முட்டை யிட்டவுட
னே தாதிமார் (வேலை செய்யும்படியான ஈக்கள்) அம்முட்டைகளைத்
தங்கள் ஆதீனத்தில் எடுத்துக்கொள்ளுகின்றன. சிறிய ஈக்கள் மெழுகு
செய்வதாயும் பெரியவை தேனை சேர்ப்பதாகவும் சொல்லப்படுகின்றன
இப்போது தாதிமார்கள் அடிக்கடிவந்து ஆகாரம் ஊட்டும். இச்சமயத்தில்
மகரந்தம் தீனியாக உதவுகிறது 5-நாளில் புழுவளர்ச்சி முடிகிறது.
பின்பு தீனி தின்னாமல் அறைகுள்ளேயே இருந்து தன்னைச்சுற்றிலும்
ஒரு கூண்டு பின்னிக்கொள்ளும். தாதிப் பூச்சிகள் கடைசியாக வந்து
அறைகளின் வாயை மெழுகால் மூடிவிடும் 8-நாள் சென்ற பின்பு உரு
வம்மாறி இறகுடன் வெளிவரும் ஸமயத்தில் தாதி பூச்சிகள் அதை நக்கித்
த்தாஜாப்படுத்தி கொஞ்சம் தேனைக்கொடுக்கும். வெளியே வந்த 24-மணி
நேரத்தில் மற்றவைகளோடு வேலைசெய்யச் சேர்ந்துவிடும். இவ்வாறு
முட்டை, வேலைசெய்யும் ஈயாவதற்கு 20-நாளும் ஆண் ஈ ஆவதற்கு 24-
நாளும் கொள்ளும். இராணி ஈ உண்டாவது சற்று வேறுபடுகிறது. மா
ளிகை அறைகளில் முட்டை இடும்புழு வளர அறைகளும் அகலப்படு
கின்றன. ஸாதாரணப் புழுக்களுக்கு ஊட்டும் மகரந்தம் தீனியைவிட
மேலான தீனி, அரசு பூச்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்றது. இராணி
யே கூண்டுக்கு அவசியமாதலால் அது இறந்துவிட வேறு குஞ்சுகளைக்

கொண்டுவந்து மாளிகையில் வைத்து அதற்குக் கொடுக்கும்படியான தீனியைக் கொடுக்க அது இராணியாகிறது. இராணி உண்டாக 13-நாள் செல்லும். இவ்வாறு விருத்தியாவதால் தினம் 100-புது ஈ கூண்டுக்குச் சேரும். புது இராணி வளர்வது பழைய இராணிக்கு மிகப்பொருமை. ஆகையால் சிறு இராணியைக் கொல்ல யத்தனிக்கிறது. ஆனால் வேலையாட்கள் சிறு இராணியைக் காப்பாற்ற முயல்கின்றன. அவ்வாறு சிறு இராணி காப்பாற்றப்பட்டால் கிழ இராணி தன் ஸ்னேகிதரை அழைத்து, தான் மாளிகைக்கு வெளியே போக எண்ணங்கொண்ட விஷயத்தைத் தெரிவிக்கின்றது. இச்சமயத்தில் கூண்டில் ஒரு பெரிய கலவரமுண்டாய் ஈக்கள் பித்துப் பிடித்தாற் போல் இங்குமங்கும் ஓடித்திரியும். கிழ இராணி கண்ட இடத்தில் முட்டை இடுவதுடன், வெளிவரும் இளம் ஈக்களைக் கொல்ல எத்தனிக்கும். ஆனால் சிப்பந்திகள் வெகு ஜாக்கிரதையாய் சிறு பூச்சிகளைக் காப்பாற்றும். உடனே இராணி வெளியேறும். அதனோடு அனேக ஈக்கள் போய் ஒரு கூட்டமாகி யாதாமொரு கிளையில் சேரும். மறுபடியும் சாந்தம்டையும். இச்சமயத்தில் பிடித்துக்கொள்ளலாம். ஈக்கள் 2, அல்லது 3-வருஷம் சாகாமல் உழல்கின்றன. ஒவ்வொரு கூண்டும் 12-அல்லது 20-ராத்தல் தேன் ஒரு வருஷத்தில் தருகின்றது. ஈக்கள் 9-மைல் தூரத்துக்குள்ளே போய் தேனைச் சேர்க்கின்றன. சிலவேளைகளில் 4 அல்லது 5-மைல் தூரம் செல்வதுமுண்டு. ஒரு நிமிஷத்திற்கு இரண்டு மைல் தூரம் போவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

## பலவித—மைகள்.

நாடு செழித்து நாமும் க்ஷேமம் பெறவேண்டுமானால் ஒற்றுமையுடன் பொறுமையையும் அநுசரித்தல் ஆவசியகமாகின்றது. ஒற்றுமை ஒன்றையே பெற்றுள்ள கூட்டத்தினராலும் பொறுமையை மட்டுமே மேற்கொண்டொழுகும் குழாத்தினராலும் அதிக நன்மைகள் ஏற்பட்டுவிடமாட்டா. ஒரு கூட்டம் எத்தனை ஒற்றுமையுற்றிருப்பினும் பொறுமைத்தன்மை இல்லாவிடில் பெரிய காரியங்கள் எதையும் சாதிக்கும் வன்மை பெற்றிருது. அப்படியே பொறுமை அநுசரித்த ஒருதிரள் ஒற்றுமையிற் கலப்புற்றிருவிடில் அதன் முயற்சிகள் கானகத்திலெரித்த நிலவாகவே முடியும். இனி பொறுமையும் ஒற்றுமையும் ஒன்றுகூடி பொன்மலருக்கு நறுமணம் ஏற்பட்டது போலானால் அப்போது பொறுமை இவர்களுடைய வாசற்படியை அடிக்கடி எதிர்நோக்கும் சுவர்ணத்தாலான புஷ்பஹாரத்திற்கு நறுமணம் ஏற்படினும் அதன் பெருமையைப் பாத்திரமறிந்தோர்தான் உணரவல்லார். தவறிப்போய்

குரங்குகையிற் பூமாலையாக அகப்பட்டுவிட்டால் அதன் கதியைச்சொல்லவுங்கூடுமோ? ஒன்று சேரக்கூடாத ஒற்றுமையும் பொறுமையும் ஒருவழிபட்டு நின்றதே பெரிய காரியமாகிய நாம் கருதுவோமானால் பொருமையினிடத்தே இவ்விரண்டையும் ஒப்பிவித்துவிட நேராதிருக்கும்படி பிரவர்த்திப்பது அதனினும் பெரியகாரியமாகக் கருதல் வேண்டும். இதில் நமது எச்சரிக்கை சற்று குறைவு படத்தொடங்கினால் தக்ஷணமே பொருமையின் ஆப்தநண்பனாகிய சிறுமை புகுந்து கோரணிகள் விளைக்கத்தலைப்பட்டு விடுவான். இதன் முடிவு தனிமை என்பதில் கொண்டு வந்து விடுகிறது. தனிமையின் சகோதரன் யாரென்றால் வறுமை தான். இப்பெரியவரைப்பற்றி நமது ஔவையார், "கோடிது கோடிது வறுமை கோடிது" என்று பேசியுள்ளார். பாரதமணித்திருநாடு வறுமைக்குத் தாய்வீடாக மாறிப்போய் இருக்கின்றது. இதன் மீக்ஷி மார்க்கத்தையே இவ்வியாசம் குறிப்பிடுகிறது. சப்தத்தின் பெருமையை மூக்கு அறியா. வாசனையின் சிலாக்கியம் செவிக்குப் புலப்படமாட்டா. இவ்விரண்டின் பெருமையையும் கைகால்களறியா. இடத்திற்கேற்றபடி அருமை புலப்படும். மிளகாய் வயிற்றுக்குள் சென்றால் புசித்த ஆகாரம் ஜீரணம் பெறுகிறது. நேத்திரத்திலிட்டுக்கொண்டால் கண் குருடுபட்டுப் போகின்றது. ஸ்தலத்திற் கேற்றவாறு பெருமையும், சிறுமையும், அமையும். குடி கெடுக்கும் பொருமை வித்தியா விஷயத்திலிருந்தால் அதனால் எவ்வளவோ உன்னதங்கள் விளைகின்றன. அவ்விதமாகவே வறுமை ஒருவனை ஐஸ்வரியவானுக்காவிடிலும் ஞானவானுக்குவது உண்மையென்றறிகிறோம். சிறுமையின் பயன் தெரிந்தே இருக்கின்றது. அதனால் செட்டுத்தனம் உண்டாகிறது. இது எவ்வளவு பெரிய நன்மை! செட்டற்ற குடித்தனம் மட்டற்ற தரித்திரம் என்று பழமொழியும் உண்டு. காலசக்கிரம் மாறிக்கொண்டே வருகிறது.

ஒரு சக்கிறத்தின் மேல்பாகம் கீழேவரவும், கீழ்பாகம் மேலே போகவும் அதிகநேரம் ஆகமாட்டா. "உடமையும் வறுமையும் ஒருவழி நில்லா" என்று கொன்றை வேந்தனில் ஒரு வசனமும் இருக்கிறது. ஒற்றுமை, பொருமை, பொறுமை, வறுமை, சிறுமை, தனிமை என்னப்பட்ட இந்த ஆறுவித—மைகளையும் பாத்திரமறிந்து பயன்படுத்திக்கொள்பவர்கள் ஏழாவது—மையாகிய பெருமையைப் பெற்றுக்கொள்ளவும் அருகராவார்.

"தெய்வத்தானாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்." (பி. கூ)

## ஓர் குரங்கின் அறிவு.

லண்டனிலுள்ள ராயல் போர்ட்ஸ்மௌத என்ற வைத்திய சாலையில் ஓர் குரங்குக்குத் தலையில் அடிபட்டிருந்ததை சிகிச்சைசெய்துக் கொண்டிருந்தார்கள். இங்ஙனமாக அக்குரங்கின் உடையவனுக்குச் சொல்லாமலே நாள் தவறாமல் வைத்தியசாலைக்குச் (Hospital) சென்று தனது தலையிலுள்ள ரணத்தை ஆற்றிக்கொண்டது. நிற்க அவ்வைத்தியசாலையின் மாதாந்தர மீட்டிங்கு ஒன்றுகூடிற்று. அக்காலையில் இக்குரங்கும் அங்குச்சென்றிருந்தது. அக்கூட்டத்தில் சில பிரமுகர்கள் (Brittish Medical Journal) ப்ரிட்டிஷ் மெடிகல் ஜர்னல் (பத்திரிகை) ஒன்று ஆரம்பிக்கவேண்டுமென்றும், அதற்கு வேண்டிய பணம் உதவிபுரியவேண்டுமென்றும் சொன்னார்கள். அக்ஷணமே அநேக தனவந்தர்கள் சந்தாவாகச்சேர்ந்ததுமன்றி, தங்களாலியன்றளவு பணம் உதவிபுரிந்தார்கள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த குரங்கு தான் ஓர் சந்தாவாக இருக்கப்பிரியங்கொள்ளுகிறதாக எழுதிக் கொள்ளும்படி செய்கையால் அங்கிருந்த பல பிரமுகரைத் தூண்டிற்று. இச்சூக்ஷமத்தை யறியாமல் பலபேர் திகைத்தார்கள். ஒருவருடன் ஒருவர் முகத்தைப் பார்த்தவண்ணமாயிருந்தார்களே யொழிய அதன் மர்மத்தை அறியவில்லை. கடைசியில் அங்கிருந்தவர்களில் அதிநுட்பமான ஒருவர் அதன் மர்மத்தையறிந்து புஸ்தகம் பேனாவுடன் சென்று நீ இப் பேப்பருக்குச் சந்தாவாகச்சேர விரும்புகிறாயா என்று கேட்டதற்கு, வாயில்லாப்பிராணியாகிய அக்குரங்கு தன்தலையை அசைத்தது. உடனே மறுபடியும் அதன் விலாசத்தைக்கேட்க தான்வசிக்கும் எஜமானின் விலாசமே தன்விலாசமென்று தன் செய்கையால் காட்டிற்றாம். இச் சங்கதி ஓர் ஆங்கிலேயப் பத்திரிகையில் வரையப்பட்டிருக்கின்றன. இதைப் பார்ப்பவர்களுக்கு இது ஆச்சரியத்தைக் கொடுக்குமென்பதில் தினையளவேனும் ஐயமில்லை. நாம் நம்பாரதர்களைச் சந்தாவாகச்சேர்ப்பதற்கு எவ்வளவோ பிரயாசைப் படுகின்றோம். நிற்க இந்தியாவின்கண் நடைபெருகின்ற சுயபாஷைப் பத்திரிகைகளுக்குச் சந்தாவோ குறைவென்பதைப்பல்லோர் அறிந்த விஷயம். வாயிலாப்பிராணிகள் கூடப்பகுத்தறிவடைந்து நியூஸ்பேப்பர்கள் (News Paper) படிக்க ஆவல்கொண்டதானால் பகுத்தறிவுடைய மானிடருக்கு அப்புத்தியானது என் கெடுகின்றதோ அறிகிலேன். ஹே! பாரதஸகோதரர்களே? இனிமேலாவது இக்குரங்கின் அறிவைப் பின்பற்றி ஒழுகுவீர்களாக!

பாண்டியன்.

## வைத்தியக் குறிப்புகள்.

புங்கன் வேறைப் பசும்பாலிற் கொள்ள புண் புரைகள், சூலை, அன்ரியாப்பு, கிரந்தி, குஷ்டம், சில்விஷம் முதலியன நீங்கும்.

---

சிவனார் வேம்பின் வேரைப் பாலிற்கொள்ள தீராத சில்விஷமும், காலிற்காணும் பிளப்பு, கரப்பன் வகைகள் வாய்வுகள் முதலியன தீரும்.

---

பொன் முசுட்டை வேரைப் பசும்பாலிற் கொள்ள சுக்கில விருத்தி யுண்டாகும், குஷ்டம், வாயு, விஷகடி, அதிசாரம் நீங்கும் ஷெ இலை அதிமூத்திரத்தைப் போக்கும்.

---

அரசமரத்தின் வேற்பட்டையை பாலிற்கூட்டி உட்கொண்டாலும், அல்லது அந்தப்பட்டையுடன் அரிசிகூட்டி இடித்து மாவுசெய்து களிக்கிண்டித்தின்றாலும் பெரும்பாடு தீரும்.

---

ஆலின் விழுதையும் ஷெ விதையையும் பசும்பாலிற் கொள்ள பாலில்லாத பெண்களுக்குப் பாலுண்டாகும். வெட்டை, மேகம், உடல் எரிவு, காந்தல் முதலியன தீரும்.

---

காட்டாமணக்குக் கொழுந்து, வெள்ளெருக்கம்பூ, மிளகு இம்மூன் றையும் ஒரு வராகனெடை வீதம் சிதைத்துக்கொடுக்க சுரம் தீரும், இத்துடன் ஒரு கழற்சிப் பருப்பைச் சேர்த்துக்கொடுக்க அண்டவாயு தீரும்.

---

வெள்ளறுகு சமூலத்தைப் பாலிற்கொள்ள சில்லறை விஷம், சிறங்கு, சொறி, குஷ்டம், கிரந்தி, வெட்டை, வெடிசூலை, காமாலை, விஷக்கரப்பன், வீக்கம் முதலியன தீரும். ஷெ சமூலத்தை தண்ணீரி விட்டு வேகவைத்து சிறு சூட்டுடன் வாயில் விட்டுக் கொப்புளிக்கப் பல்வலி தீரும்.

---

கோரைக்கிழங்கை அரைத்து பசும்பாலிற் குழைத்துக் குடிக்க கற்றாழை நாற்றம், அதிபித்தம், பித்தத்தாலுண்டாகும் வீக்கம், சத்தி ஜுரம், நாவறட்சி, தாபசோபம் நீங்கும். ஷெ கிழங்குடன் கொத்தமல்லி பேய்ப்புடல், சுக்கு சிற்றறத்தை முதலியவைகளை ஓர் நிறையாய் நிறுத் தெடுத்து கஷாயஞ்செய்து சாப்பிட பித்த ஜுரம் நீங்கும்,

---

## ஹாஸ்யத் துணுக்குகள்.

**கைதி:**—ஐயா! இந்தக்கேசுக்கு 1000 ரூபா அனியாயமாய்த் தோன் றுகிறது.

**வக்கீல்:**—நான் உன்னைப் பைத்தியக்காரனாக ரூபித்து, விடுதலை கிடைக்கப் பண்ணவில்லையா?

**கைதி:**—ஆம் சரிதான். ஆனால் தங்களுக்கு 1000 ரூ. பீஸ் கொடுக்கத்தக்க அவ்வளவு பைத்தியகாரனாகி விட்டதாக ரூபிக்கவில்லையே!

ஒரு நியாதிபதி ஒருகட்சிக்காரனைப்பார்த்து "நீ திருடனென்று உன் முகம் கண்ணாடிபோல் காட்டுகிறது" என, கைதி ஐயா என் முகம் கண்ணாடியாதலால் அதில் உங்கள் முகம் உங்களுக்குத் தெரிகிறதுஎன்றான்.

---

துரை:—"எனக்கு சலிப்புண்டாகிற வரையில் நெடுநேரம் உன்னோடு வார்த்தையாடினேனே என்ன பிரயோஜனம்."

துரைசானி — மெய்தான் புத்திசாலிகள் நீண்டநேரம் பேசமாட்டார்கள். ஒரேவார்த்தையில் குறிப்பறிந்துகொள்வார்கள்.

---

ஒரு வழக்காளி நியாயசபையில் பேசிக்கொண்டிருக்கும்போது எதிரியின் வக்கில் அவனைப்பார்த்து "நீ என்ன நாய்போற் குரைக்கிறாய்" என, வழக்காளி வக்கீலைப்பார்த்து "ஐயா, திருட்டுப்பயலைக் கண்டால் நாய் குரைக்காதா"! என்றான்.

---

"உனக்கு ஊர், கிராமம் உண்டோ" என, எனக்கு ஊர் கரூர் கிராமம்—சாளிக்கிராமம், இடம்—இருப்பிடம், வேலி—திருநெல்வேலி, காணி—மாகாணி, நிலம்—நன்னிலம், கடை—சாக்கடை, பாய்—பீப்பாய் சாடு—சுடுகாடு, திரம்—தரித்திரம், சேரி—புதுச்சேரி, விருத்தி—மலவிருத்தி என்றான்.

---

ஐயா, உமக்குப்பிள்ளைகள் உண்டோ? என்று ஒருபையன் ஒருமனிதனைக்கேட்டான் உண்டு என்றான். "உனக்குப்பிறந்தது எத்தனை ஊருக்குப்பிறந்தது எத்தனை!" என்று கேட்டான். "அந்தமனிதன் திடுக்கிட்டு நின்றான்" உனக்குப்பிறந்தது பிள்ளை ஊறுக்குப்பிறந்தது பெண்ணல்லவா என்றான்.

---

## வர்த்தமானங்கள்.

**ஆகாய விமானப் போஸ்டு:**—லண்டனிலிருந்து தபாலுடன் ஆகாயத்திற் கிளம்பிய ஹுபர்ட்டு தம்முடைய விமானத்தின் நிலை மாற்றத்தால் 100 அடி உயரத்திலிருந்து விழுந்து தொடைகளை முறித்துக்கொண்டார். அதன் பிறகு ஹேமல் என்ற ஆகாய விமானி விழுந்து விட்ட மெயிலை எடுத்துக்கொண்டு ஆகாயத்திற் கிளம்பி அதிவேகமாய்ப் பறந்து போய்ச் சேர்ந்தாராம். சில இடங்களில் மணிக்கு 105 மைல் வரையிற் கூட சென்றாரெனப்படுகிறது.

---

**கொள்ளிவாய்ப் பிசாசு என்பதின் இரகஸ்யம்**—ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஹங்கேரி நாட்டில் பூமியிலிருந்து ஓர்வித கியாஸ் ஆவி அனேக வருஷமாய் வெளிவருகிறதென்று இப்பொழுது தெரிந்தது. கவர்ன்மெண்டார் இதைக்கேட்டு அவ்விடத்தை பரீக்ஷிக்கலானார்கள். 600-அடி வெட்டினதும் பூமியிலிருந்து அதிக சப்தத்துடன் கியாஸ் புகை வந்தது. இங்கே வித்திய சக்தி எந்திரங்கள் வைக்க ஏற்பாடாகிறது. நமது தேசத்தில் இரவில் கொள்ளிப் பிசாசுகள் நடக்கின்றனவென்று ஜனங்கள் கூறுவதுண்டு. பூமியிலிருந்து கியாஸ்புகைப் புறப்படுவதே இதற்குக் காரணம். பதார்த்த விஞ்ஞான சாஸ்திரங்களைப் படித்துள்ள நமது ஜனங்களில் சிலர் இந்த விஷயத்தை அறிந்திருக்கிறார்கள்.

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

5. **சர்வநோய்சம்ஹாரன்:**—இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால் கை, கால், கனுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்பு நோய், தலை நோய், கழுத்து நோய், பக்க சூலை, இடுப்பு நோய், சூதகவலி, பார்சு வாயு மேகவாயு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களை யும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. சிலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

6. **சுகந்த கூந்தல் தைலம்:**—இத்தைலத்தால் தலைமயிர் மீசை, கண் இமை, வெகு செழிப்பாகவும், நெருக்கமாகவும், கறுப்பாகவும் வளரும். கண்களைக்குளிரச்செய்யும். சகல கண் நோய்களும், தலை நோய்களும் நீங்கும். செம்மட்டைமயிர் கருக்கும் மயிர் உதிராமல் கார்க்கும். கண்களுக்கு பிரகாசத்தை தரும். விலை புட்டி 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 அல்லது இரண்டு சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

7. **நேத்திர பிந்து:**—கண்ணோய், கண்குற்றல், கூசல், நீர் வடிதல், மங்கல் அந்திமாலை, பீளைக்கட்டல், மாமிசம் வளர்ந்திருந்தால், பூவிழுந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை, புருவம் இவைகளின் வலி, கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். மருந்து உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டியது அனுவசியம். சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

8. **கர்ணபிந்து:**—காதில் சீழ்வடிதல், வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு, இவைகளை குணமாக்கும். செவி நன்றாய் கேட்கும். சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

9. **சர்வபடை சம்ஹாரன்:**—இடுப்பு, தொடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி ஓயாத நமைச்சலைத்தந்து வெகுசீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும் மேகப்படை, சொரிசிரங்கு, தடிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

10. **பேதி மாத்திரைகள்:**—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும். அஜீரணம், பித்த உபத்திரவங்கள் சகல வாயு, மலச்சிக்கல், அக்கினி மாந்தம், வாதம், கைகால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி. சகல சுரங்கள் முதலியதுகளை சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

11. **ஜுவர சம்ஹாரி:**—தீராத நாள்பட்ட சகல சுரங்கள், குளிர்ச் சுரம், முறை சுரம், வாத சுரம், பித்த சுரம், அஸ்திசுரம், மலைசுரம்,

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

மார்வலி, காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்புவெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறை சுரம், நாலாமுறை சுரம் முதலிய சகல சுரங்களை அடியோடு போக்கும். டப்பா 1-க்கு ரூபா 1 வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

12. **உரோம சம்ஹாரி:**—இந்த சூரணத்தை மயிருள்ளயிடத்தில் தடவினால் வெகு எளிதில் மயிர் நீங்கிவிடும். சீசா 1-க்கு அணா 4. 1 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

13. **சுகந்த பல்போடி:**—நல்ல ஜீரண சக்தியைத் தரும். பல்வலி எக்காலத்திலும் வராது. பல் எக்காலத்திலும் விழாது சீசா 1-க்கு விலை அணா 3 வி. பி. சிலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

14. **ஸ்கலித ரக்ஷணி:**—பலஹீனத்தாலும், உஷ்ணத்தாலும், சிற்றின்பத்தில் பாலியத்தில் நுழைந்து மூழ்கியிருந்த காரணத்தாலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தானாக வெளிப்படுவதை நிற்பாட்டி தேக திடத்தை தரும். சீசா 1-க்கு அணா 8, வி. பி சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையிலும் அணா 5 பிரத்தியேகம்.

15. **உயர்ந்த கஸ்தூரி:**—மிகவும் நேர்த்தியானதும், முதல்தரமானதும், காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்பொழுதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48. 1 ரூபாய்க்கு குறையாமல் சில்லரையிலும் விற்கப்படும். வி. பி. சிலவு பிரத்தியேகமாகும்.

16. **தேள்கோட்டின் மருந்து:**—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினால் தக்ஷணமே விஷமிறங்கி வருத்தப்பட்டு சகிக்க முடியாத வேதனையில் நின்று நீங்கி யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஆனந்திக்கும்படியான அனுகூலத்தைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 12 சீசாக்கள் வரையிலும் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

முக்கியகுறிப்பு:—ஒரே தடவையில் 12 சீசா தேள்கொட்டின் மருந்துக்குக் குறையாமல் வாங்கினால் டஜன் 1-க்கு 2—3—0 வீதம் கொடுக்கப்படும். வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம். இக்குறிப்பு தேள் மருந்து தவிர மற்றெந்த மருந்திற்கும் சம்பந்தப்படமாட்டாது.

17. **மேகரண மருந்து:**—இதை வெள்ளைத்துணியில் தடவி ரணங்களின்மேல் போட, அரையாப்பு, கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை, செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அருகுளியன், பிளவை, கிரந்தி, மேகவெடிப்பு, லிங்கப்புற்று, யோனிப்புற்று முதலிய இரணங்கள் ஆறி சொஸ்தமாகும். விலை சீசா 1-க்கு அணா 8, இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 3 சீசாக்கள் வரை வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

**பி. சுப்பராய் பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.**

# COMPLETE LETTER WRITER.

**2nd Edition Revised and Enlarged**

BY

**HARI CHARAN DAS**

**Price Re. 1** *(Full cloth Gilt 320 pages.)*

A universal Guide to the Art of Letter writing for all positions of life.

IT CONTAINS CHAPTERS ON :—1. Private correspondences, 2. News paper, 3. Doctors, 4. School correspondences, 5. Government & Commercial, 6. Collector's office, 7. Attorneys, Vakils and muktedars, 8. Steamer, 9. Police, 10. Municipality, 11. Income-tax, 12. Railways, 13. Tramways, 14. Medical department, 15. Postal department, 16. Telegraph department, 17. Precis writing, 18. Drafting, 19. Docketing, 20. Book keeping, 21. Miscellaneous forms, 22. Miscellaneons applications forms, 23. Forms of Address, 24. Paper currency, Abbreviations and daily wages.

A copy of the valuable book will dispense with the necessity of seeking the help of others for writing letters or applications, etc.

## ENGLISH ETIQUETTE & PROVERBS.

A very useful book for those who have to come in contact with Englishmen Price 5 annas only.

M. L. DAS & Co.,
**Book-sellers & Publishers,**
*122, Baitahkna Road, Calcutta.*

---

## ஆரியஜன போதினி.

இது ஓர் அற்புதமான வசன காவியம். தேசம், மதம், பக்தி, பூர்வகாலச்சிறப்பு, எதிர்கால நிலைமை, தற்காலத்தாழ்வு, முற்போக்கு, பெரியோர்களின் சரித்திரப் பிரபாவம், அன்னோரின் அமிர்தமயமான போதனைகள், உபன்யாஸங்கள் நூதன வியவஸாயம், வேதாந்தஸாரம், ஸநாதன தர்மம், தாதாபாய், அன்னி பெஸண்டு, கர்னல் ஆல்காட் முதலியவர்களின் காரியங்கள் இன்னோரன்ன அரிய விஷயங்களைப்பற்றிப் பேசப்பட்டிருக்கின்றன. 120 பக்கங்களுள்ளது வி. பி. சார்ஜ் உள்பட விலை அணா 10.

மகாமக மகாவைபவம் விலை அணா 1 இப்புத்தகம் வேண்டியர்கள் 1½ அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பினால் புத்தகம் ஒன்று அனுப்பப்படும்.

**மானேஜர், என். ஆர் டிஸ்பென்ஸரி, கும்பகோணம்.**

---

## "பாலசந்திரன்"

வாராந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

ப்ரும்மஸ்ரீ மகோமகோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்கள் முதலிய கல்விமான்களால் வியந்து கூறப்பட்டது. கொழும்பு நகரில் இதுவொன்றே ஏராளமாகச் செலவிடப்படும் சைவத்தமிழ்ப் பத்திரிகை.

**வருடச்சந்தா.**

| | | |
|---|---|---|
| உள்ளூர் | ... ... ... | 3—0—0 |
| இலங்கையின் பிறவிடங்கள், இந்தியா | ... | 4—0—0 |
| தொடுவாய்ப்பகுதி | ... ... ... | 5—0—0 |

☞ முற்பணம் கொடுக்கவேண்டியது.

M. V. PONNAMPALA PILLAI,
*No. 103, Checku Street,*
**COLOMBO.**

## யாழ்ப்பாணம் அச்சுவேலி யந்திரசாலை.

இதினின்று "சன்மார்க்க போதினி" என்னும் புதினப்பத்திரிகை ஒன்றுவிட்டொரு சனிக்கிழமைகளில் வெளிவரும் வைத்திய விஷயங்களுமுண்டு. வருட விலை தபாற்செலவுட்பட ரூபா 2.

| | |
|---|---|
| பாலவைத்தியம் இங்கிலீஷ் தமிழ் முறைகள் அண | 8 |
| பிரசவவைத்தியம் ... ... ... | 8 |
| நயனவிதி (செய்யுள்) தமிழ்முறை ... ... | 5 |
| தருமபுத்திர நாடகம் ... ... ... | 8 |
| இராமநாடகம் ... ... ... | 8 |

இவைகளை விரும்பினோர் கீழ்க்காட்டிய விலாசத்துக்கு எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்க.

**ச. தம்பிமுத்துப்பிள்ளை,**
புத்தூர் போஸ்டு,
அச்சுவேலி, யாழ்ப்பாணம்.

---

| | | | | |
|---|---|---|---|---|
| குளிர் ஜுரத்திற்கு மாத்திரை அல்லது திராவகம் | ரூபா | 1 | 0 | 0 |
| பலஹீனத்திற்கு மாத்திரைகள் ... | ,, | 1 | 8 | 0 |
| கடியை ஒரேநாளில் சொஸ்தப்படுத்த எங்கும் விற்கப்படுகிறது | | 0 | 4 | 0 |
| பற்பொடி ... ... ... | ,, | 0 | 4 | 0 |

**Dr. H. L. Batliwalla, J. P. Warli Loboratory,**
*Dadar Bombay,*

---

## பற்பொடியும் பவளச்சுன்னமும்.

இந்த சஞ்சீவி யெனும் பற்பொடியானது தஞ்சைமாநகரத்தில் பரம்பரையாய் கையாண்டு வந்தது. நீடித்து அனுபோகத்திற்குவாராமல் புதைப்பட்டிருந்தது. இது ஓர் மஹான்களால் வெளியாகி ஜனங்களுக்கு உபகாரமாகும் பொருட்டாகவும், அனுபோகத்திற்கு ஒத்திருப்பதையும் பல பேர்கள் வேண்டுகோளுன்படி வெளியிடத்துணிந்தோம். ஷை பற்பொடியை ஓர் சிட்டிகை யெடுத்து காலையிலும் மாலையிலும் பற்துலக்கி வருவதுடன் இந்த பவள புற்றினால் செய்த சுன்னத்தையும் தாம்பூலத்துடன் 12 நாள் தரித்துக்கொண்டு வந்தால் பல்லசைவு, இரத்தம் வருதல், கீழ்வருதல், புழுவெட்டு, ஜிலிஜிலிப்பு, கூச்சம், நடுக்கம், எகிறில் ஏற்படும் துர்நாற்றம், எகிர்கரைதல், பல்லரணை முதலான நோயை கண்டிப்பாய் நீக்கி சுவஸ்தம் செய்வதோடு ஆயுள்பரியந்திரம் பல்விளாமல் காக்கச்செய்யும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் அவுன்ஸ் கொண்ட பற்பொடி டப்பா 1-க்கு விலை | 0 | 6 | 0 |
| ஓர் பலம் கொண்ட சின்ன டப்பா 1-க்கு விலை | 0 | 2 | 0 |

**வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.**

**பி. ஸாம்பமூர்த்தி ஐய்யர்,**
ஆயுள்வேத பண்டிதசாலை, ஆய்குடி போஸ்டு,
திண்டுக்கல் மார்க்கம்.

## இருபதாவது நூற்றுண்டின் ஓர் ஆச்சர்யம்.

## ஆச்சர்யமான திரிகால தேரிசனக் கண்ணுடி.

### கனவான்களே! சொற்ப சிலவைக்கொண்டு திருகால வர்த்தமானங்களையும் தெரிவிக்கக்கூடியது இதைத்தவிர வேறென்றுமில்லை.

நமது பூர்வீக ரிஷிகள் நடந்த வர்த்தமானங்களை எவ்வகையினுல் அறிந்தார்களோ அதுபோலவே ஒரு மகாத்மாவின் கருணையினுல் வெளி வந்திருக்கிறது. ஜனங்கள் இதனுல் நன்மையடையலாம். இக்கண்ணுடி யானது அடியில்வரும் விஷயங்களை அறிவிக்க சக்தியுள்ளது:—1. ஒரு மனுஷ்யன் என்ன செய்துகொண்டிருக்கிருன். (2) என்ன நிலையி லிருக்கிருன். (3) இக்காரியம் ஜெயமா அபஜெயமா. (4) இந்தக்காரி யம் எவ்வாறு முடியும். (5) ஓர் மனுஷ்யன் தான் செல்லவேண்டிய நாட்டின் சௌகர்யா சௌகர்யங்கள். (6) உயர்தர மித்திரர்களும் உறவினர்களும் எவ்வண்ணமிருக்கிருர்கள். (7) பூமியிலுள்ள புதையல் களும் அது எத்தன்மையான தென்பதும். (8) இந்த வழக்கு எவ்வித மாய் முடியும், இந்தக்கண்ணுடி முற்கூறிய விஷயங்களை அறிவிக்கக் கூடியது. இக்கண்ணுடியைப்பற்றி அநேக கல்விமான்களாலும் நற் சாக்ஷிப்பத்திரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இக்கண்ணுடியின் விலை தபால் சார்ஜ உள்பட ரூபா 2—9—0 தான். இக்கண்ணுடியின் அளவு 7×5 அங்குலம். இக்கண்ணுடியை உபயோகிக்கும் விபரமடங்கிய புத்தகம் ஒன்றும் கண்ணுடியுடன் அனுப்பப்படும். கண்ணுடி கிடைத்த 24-மணி நேரத்திற்குள திருப்தியில்லாத பக்ஷத்தில் திருப்பிவிட்டாலும் திரும்பப் பெற்றுக்கொண்டு ரூபா 2 அனுப்புவிப்போம். வாங்குகிறவர் கள் தங்களின் பெயர், ஊர், போஸ்டு முதலியவற்றை விபரமாய் இங்கி லீஷில் எழுதவேண்டியது.

இன்நவீன திருகால தெரிசனக்கண்ணுடி வேண்டியவர்கள் கும்ப கோணம் என். ஆர். டிஸ்பென்ஸரி, மானேஜரிடத்திலும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாஸம்:—

ASHABHAI VAGHJIBHAI PATEL,

Post Karmasad (*Via*) Anand,

**KAIRA Dt., S. GUJRAT.**

## பிரசினோத்தர ரத்னமாலை என்னும் ஓர் வேதாந்த சாஸ்திரம்.

இது யாவருக்கும் புலப்படும்படியாக செந்தமிழ் நடையில் வினாவிடை ரூபமாய் விரிவான 1000 பிரசினோத்திரங்கள் வரை நல்ல வெண்மையான கிளேஸ் பேபரில் தெளிவான அக்ஷரங்களால் பாரம் 8 பேஜ—ு ஸைஸில் ஏறக்குறைய 150 பக்கங்கள் வரை அச்சிடப்பட்டுள்ளது. இதில், அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த ஸ்வரூபத்தின் மூன்று லக்ஷணங்களும், உள், வெளி, என்ற இருவகைப் பிரபஞ்ச விஷயங்களும், அதாவது இந்த உலகத்தைப் போல் நம் சரீரத்தி னுள்ளிருக்கும் உலக விசித்திரங்களும், கர்மம், பக்தி, ஞானமாகிய மூன்று யோக விஷயங்களும்; பிர்மம், சக்தி, திருமூர்த்தி என்பவைகளின் வரலாறுகளும், ஈசுவர நிரணயத்தைப்பற்றிய ஒவ்வொரு மதஸ்தரின் அபிப்பிராயமும், கங்கா நதியின் உற்பத்தியும், மகாமேரு வின் சிறப்பும், சூரியனுடைய லோக யாத்திரையின் சூக்ஷ்மமும், இன்னும் இதுபோல் பல சிறந்த விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. தேவையுள்ளவர்கள் இதனடியில் கையொப்பமிட்டவருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். வி. பி. மூலம் இதன் விலை அணு 10.

வா. முத்துகிருஷ்ணய்யர்,
இந்துசாஸ்திராபிமானி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.

---

## அசாத்ரோகங்களுக்கு பிரத்க்க்ஷ அவுஷதம்.

கஸ்தூரி திராவகம்—இந்தத்திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டு வீதம் ஒரு ஒயின்கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீர்அழிவினால் தாங்கமுடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். 40 நாள் மருந்து சாப்பிட்டால் வியாதிநன்ருய்ச் சொஸ்தமாகும். தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்கவாய்வு துர்நடத்தையால் ஆண்மைப்பலமற்ற சையோகம் செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச்சாப்பிட மேற்படி திராவகமும் ஆணுடம்பில்பூச தஜ்ஜபங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் மேற்படி திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம், அதிகநாள்சென்ற வாதரோகம், தலைச்சுற்று, மூளை பலவீனம் ஞாபகசக்திக்குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு, நாட்சென்ற பிரமேகம், இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம். இந்த மருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், சாம்பிராணிப்பதங்கம், வேறு மூலிவகைகளும், சேர்த்து திராவகம் வடித்துவைத்திருக்கின்றேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனால்தான் இது சீக்கிரம் சுகமடைவிக்குமெனக் கூறுகின்றேன் இந்த மருந்தைக்கொடுத்து அனேக பிராயாணிகளைச் சுகப்படுத்தி விலைஉயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கின்றேன். இப்போது எல்லாருடைய பிரயோசனத்திற்காக சொற்பசெலவெடுக்க வெளியே பிரசித்தம் பண்ணிவருகின்றேன் பித்தபாண்டு, மகோதரம் காச்சல்கட்டி வயிற்றிலிருக்கும் துர்நீர்

களுக்கு கை கண்ட ஔஷதம். விலை அரை அவுன்சுக்கு ரூ 10. இதற்குக்குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவுபிரத்தியேகம்

நுஜ்ஜிபங்கதைலம்—சிலர் தம் இளம்பிராயத்தில் புத்தியீனமாய் இந்திரியத்தை தம்கையால் பளுதாக்கிக்கொள்வதால் சிலநாளைக்குப்பின் நரம்புகள்பளுது பட்டு ஆணுடம்பு பலனற்றுச் சுருண்டு சிறிதாய்ப்போய் இந்திரியம் குறைந்தும் துர் ஸ்திரி சையோகத்தால் அனேக உஷ்ண மான மருந்துகள் சாப்பிட்டு பெலனற்றுப்போகின்றார்கள். இவ்விரு வகையுள்ளவர்கள் மனக்கவலையுடன் வியாதியை ஒருவருக்கும் சொல் லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பில்பூசி உள்ளுக்குக் கஸ்தூரி திராவகமும் சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்குவந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி 44 தினத்துக்குள் வியாதி சுகப்படும். 21 நாள் தைலம்பூசி மேற்படி திராவகம் சாப்பிடுவரேல் வியாதியின் சுகந்தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூ 2—8—0. தபாற்செலவு பிரத்தியேகம்.

வீரிய ஸ்தம்பனக் குளிகை—ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரே குளிகையில் தெரியும் இந்தக் குளிகை (இந்திராசனம்) ஒரு நாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதற்காக உண்டாக்கப்பட்டது. இதைச் சிலர் சாஸ்திரத்திற் சொல்லியபிரகாரம் செய்யாமல் சொற்ப கிரயத்துக்கு விற்பனை செய்கிறார்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் வித்தியா சப்பட்டு ஏமாந்துபோகிறார்கள். ஆனல் சாஸ்திரப்படி அதிக பொருள் செலவழித்துச் செய்கிறவர்களிடம் பெறப்பின்னடைகிறார்கள், இது உலகவியல்பே, இதில் முக்கியமாயறிய வேண்டிய காரியம் யாதெனில், இதின் முழுக்கிரயமும் கொடுத்து எடுத்து ஒரு குளிகையாற் சுகமறிய லாம். காரியமும் விளங்கும் இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. 12-குளிகைக்குக்குறைய அனுப்பப்படமாட்டா. பரீட் சித்தவர்களே இதன் சுகத்தை அனுபவிப்பார்கள். 12 குளிகையின் விலை ரூ 2. தபாற்செலவு அணு 4.

சாப்பிடும் விதம் சையோகஞ்செய்ய அரைமணித் தியாலதிற்கு முன் ஒருமாத்திரையைச் சாப்பிட்டவுடன் காச்சியபசுப்பாலில் கற்கண்டு போட்டுக் குடித்தால் இந்திரியம் இளகாது. இளகவேண்டுமானல் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்.

கெங்காதார் தைலம்—அண்டவாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன் விலை 1 அவுன்சு ரூ 5.

மகாநாராயண தைலம்—வாய்வுகள் கபாலபீனிசம் முதலானதுக்கு கைகண்டது. 1 அவுன்சுக்கு 1 ரூபா. (மேற்கண்ட மருந்துகளுக்கு தபாற் செலவு பிரத்தியேகம்.)

மிருத்துசீவன் அல்லது கஸ்தூரிமாத்திரை—எட்டுவிதமான சுரத் திற்கும், அசுத்தசலத்தினல் கொசு முதலான விஷசெந்துக்களினலுண் டாகும் மலேரியா ஆகிய விஷக்காச்சல்களுக்கும், 18 விதமான சன் னிக்கும் இதில் ஒரு மாத்திரையை இஞ்சிச்சாற்றில் உரைத்துச்சாப்பிட் டால் எப்பேர்ப்பட்ட சன்னியும் ஒரு அல்லது இருவேளை மருந்திற் சுகப்படும். ஏழுவேளை சாப்பிட்டால் சன்னி, காச்சல், சுரம், முதலியன சுத்தமாய்ச் சுகமாகும். 12 குளிகையின் விலை ரூ 2.

காமனீமது பஞ்சனீ மாத்திரை:—இது தங்கம், அபரக்பஸ்பம், கஸ்தூரி, குங்குமப்பூ, லிங்கசெந்தூரம், முதலிய விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துச்செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது. இதன் சொற்ப குணத்தை மட்டும் காட்டுகிறேன். நீரிழிவு, காசம், இருமல், ஈழை, தீராத வாதரோகம், பிரமேகம், மூலச்சூடு புதிதாய்க்காணும் அண்டவாதம், வெள்ளைமுதலிய வியாதிகள் தீந்து தாதுபுஷ்டி உண்டாகும், மூன்றுநாளில் நல்ல குணம்தெரியும். 44 நாளில் வியாதி பூரண சுத்தமாகும். காலை மாலை 14 நாள் சாப்பிடக்கூடிய 28 மாத்திரைகளின் விலை ரூபா 5. 44 நாள் சாப்பிடக்கூடிய 88 மாத்திரைகள் எடுத்தால் ரூபா 13-க்கு கொடுக்கப்படும். வபாற்செலவு பிரத்தியேகம்.

சந்திரிகா பிரதமமாத்திரை:—இந்த மாத்திரை காசம், பவுத்திரம், அண்டவாயு, பக்கவாயு, பித்தபாண்டு, வெள்ளை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீனசக்கபாலம், துர்ஸ்திரி, கமனத்தாலுண்டான நோய்கள், வெண்குட்டம், நீரழிவு, போகத்தாலுண்டான நோய்களை எல்லாந்தீர்க்கும். இம்மாத்திரையை 21 நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாக்கும் மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுமானம் தெரிவிப்போம். 44 குளிகையின் விலை ரூபா மூன்றரை.

யுத்தகங்மள்—பின்னுற் காட்டப்பட்டிருக்கும் அருமையான புத்தகங்கள் மானுடர் எவரும் இகபர நன்மைகளைக்கருதி அவைகளைக் கைப்பற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் இவ்விருவிஷயங்களுக்கும் குருவைப்போல் போதிக்கக்கூடிய மெத்த அருமையான புத்லகங்களான் தால் ஒவ்வொருவரும் இவைகளைக்கட்டாயம் வாங்கிவாசிக்கவேண்டியது.

இவைகள் செந்தமிழ் அலங்கார நடையில் எவரும் வாசித்தறியக்கூடிய வெள்ளைமொழிகளாலியற்றப்பட்டு வாசிப்போருக்கின்பத்தையும் மனோஉற்சாகத்தையும் கொடுக்கக்கூடியவைகள், சொற்ப பிரதிகள்தான் இருககின்றன.

காலகாணஞ்செய்யவேண்டாம்.

கோகசாஸ்திரம் மாபிள் கட்டு ஒரு பிரதி ரூபா 3 கலிக்கோ ரூ. 4.

கைத்தொழில் போதினி—மாபிள்கட்டு ரூபா 1. கலிக்கோகட்டு ரூ. 2.

பூலோகௌஷகோபகாரி வாணவேடிக்கைகள் அடங்கிய பத்தாம் சங்கியை ஒன்றுக்கு அணு 10.

அனேக இங்கிலீஷ் சாமான்களடங்கிய ஒன்பதாம் சங்கியை ஒன்றுக்கு அணு 12.

சோகன்லநல் சரித்திரம் ஒன்றுக்கு அணு 8.

இன்சுபெக்றர்சீபுசாய்பு சரித்திரம் அணு 12.

மேற்படி சரித்திரமும் சோக்ன்லால் சரித்திரமும் ஒரேகட்டிடம் ஒன்றுக்கு ரூபா 1—4—0.

ருஷிய ஜப்பானிய யுத்தம் இருபகுதிகள் ஒரு ரூபா.

இரசமணியெய்யும் புஸ்தகம் (8 பக்கம்) ரூ. 1—4—0.

மேற்காட்டிய புத்தகங்கள் வேண்டுவோர்க்கு தாமதமின்றி சாக்கிரதையோடு அனுப்பப்படும். தபாலில் வேண்டுவோர்க்கு தபாற்செலவு பிரத்தியேகம். மற்ற விபரங்களுக்கு காட்லாக்கை எடுப்பித்துப்பார்க்கவும் இனமாக அனுப்பலாம். ஒருமுறை இப்பொருட்களை வாங்கி தினமும் மகிழ்வடைபுங்கள்.

எமது விலாசம்

மகாராஜ் கெங்காபிரசாத் பண்டிதர்.

மருதானை முதலாம் டிவிஷன் No. 74, கொழும்பு